# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 3.00 மணித்தியாலங்கள் | புவியியல் - I, II Geography- I, II | பாட எண் : 61 \| T \| I, II |
|---|---|---|
| பெயர் / சுட்டெண் ............................................................ | | |

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

வினாப் பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

## புவியியல் - I

❖ **01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1) உலகின் கனியவளப் பரம்பலின் அடிப்படையில் இரும்புத்தாதுப்படிவு பரவியுள்ள “தாமோதார்” பிரதேசம் ......................... நாட்டில் அமைந்துள்ளது. (சீனா, இந்தியா, அவுஸ்திரேலியா)

2) உலகில் பரவலடைந்துள்ள ......................... காடுகள் குளிர்பருவத்தில் மரங்களின் இலைகளை உதிர்த்துவிடுகின்றது. (அயனமண்டல மழைக், இடைவெப்பவலயக், ஊசியிலைக்)

3) வளிமண்டலக் கட்டமைப்பில் மாறன்மண்டலத்தின் உயர் எல்லைக்கு அருகாமையில் ......................... பயணம் செய்கின்றது. (அதிவேகஜெட்விமானம், சாதாரணவிமானம், செயற்கைக்கோள்)

4) கற்கோளத்தின் கட்டமைப்பில் சீமாப்படைக்குக் கீழ் .............................. அமைந்துள்ளது. (கண்டஓடு, மேல்மூடி, பசோல்ட்பாறை )

5) யுரேசியாவிற்கும், இந்து அவுஸ்திரேலியத் தகட்டிற்கும் இடையில் ......................... மடிப்பு மலை தோற்றம் பெற்றுள்ளது. (யூரல், இமயம், பெரியபிரிப்பு)

❖ **06 தொடக்கம் 10 வரை தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் ‘ச’ வையும் பிழையாயின் “பி” யையும் சுற்றி வட்டம் வரைக.**

6) மத்தியதரைக்கடலுடன் தொடர்பைக் கொண்டுள்ளதாக கருங்கடல் அமைந்துள்ளது. ச / பி

7) இலங்கையில் உள்ள குடிசைக்கைத்தொழில்களில் பிரம்புவேலைக்குப் பிரசித்திபெற்ற “ரட்டவடுன்ன” பிரதேசம் கொழும்பு மாவட்டத்தினுள் அமைந்துள்ளது. ச / பி

8) உலகிலே அதிவேகமாக சனத்தொகை வளர்ச்சி இடம்பெறுவது ஆபிரிக்காக் கண்டத்திலாகும் ச / பி

9) உயிர்க் கோளத்தில் உள்ள தாவரங்கள் ஒளித்தொகுப்பின்போது விலங்குகளின் சுவாசத்திற்கு அவசியமான ஒட்சிசன் வாயுவை வெளிவிடுகின்றது. ச / பி

10) யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம் சீன அரசின் நிதி உதவியின் மூலம் நிறுவப்பட்டுள்ளது. ச / பி

❖ **11 தொடக்கம் 17 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களை பொருத்தமான சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.**

11) புவியின் உட்பகுதியிலுள்ள மக்மா குளிர்வடைந்து பாறைப்படைத் தளங்களுக்கிடையில் ஒடுங்குவதினால் ...................... தீப்பாறைகள் உருவாகின்றன.

12) இலங்கையின் தாழ்நில ஈரவலய மாவட்டங்களில் ...................... மண் காணப்படுவதுடன், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கும் உகந்த மண் ஆகும்.

13) உலகில் அதிக சனச்செறிவுமிக்க நான்கு வலயங்களில் அதிகம் காணப்படுவது ...................... கண்டத்திலாகும்.


14) 2022ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கைக்குள் நுழைந்த மண்டோஸ் புயலானது ...................... உருவாகியுள்ளது.

15) இலங்கையில் முதலில் உருவாக்கப்பட்ட தெங்கு முக்கோணவலயம் வடமேல் மற்றும் ...................... மாகாணங்களிலுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ளது.

16) இலங்கையில் 2001 ஆம் ஆண்டு பிரதான மைக்ரோ மோட்டார் வாகன பொருத்தும் தொழிற்சாலை ...................... பிரதேசத்தில் அமைக்கப்பட்டது.

17) உலகில் இலத்திரனியல் உற்பத்தியில் ...................... நாடு முதன்நிலை வகிக்கின்றது.

❖ **தரப்பட்டுள்ள வரைபினைப் பயன்படுத்தி 18 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




மூலம்:-வடமாகாணக்கல்வித்திணைக்களம்(EMIS)

18) வடமாகாணத்தில் மிகக்குறைந்தளவு மாணவர்தொகை .................. இல் காணப்படுகின்றது.

19) வடமாகாணத்தில் ................தரங்களிலும் ஆண்களைவிட பெண்கள் குறைவாக உள்ளனர்.

20) வடமாகாணத்தின் தரம் 1 தொடக்கம் 9 வரையான மாணவர்களின் தரவுகளை விபரிப்பதற்கு ................................... வரைபடம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

❖ 21 தொடக்கம் 25 வரையுள்ள "அ" மற்றும் "ஆ" என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. இந்நிரலில் உள்ளவற்றை அவற்றின் தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையினது இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

21)

| **"அ"** | **"ஆ"** |
|---|---|
| **சக்தி நிலையங்கள்** | **அமைந்துள்ள இடம்** |
| 1. சூரியமின்சக்தி | A. பளை |
| 2. நீர்மின்சக்தி | B. பருதகந்த |
| 3. காற்றுமின்சக்தி | C. களனிதிஸ்ஸ |
| | D. சபுகஸ்கந்த |

1.BCA 2.BCD 3.ACD 4.ACB (............)

22)

| **"அ"** | **"ஆ"** |
|---|---|
| **பௌதிக அம்சங்களின் வகை** | **அவற்றுக்கான எடுத்துக்காட்டுக்கள்** |
| 1. தரைத்தோற்ற அம்சம் | A.வெலிகமக்குடா |
| 2. நீர்வடிகால் அம்சம் | B. குழிவுச்சாய்வு |
| 3. கரையோர அம்சம் | C. கண்டல்தாவரம் |
| | D. மியாந்தர் வளைவு |

1. CAB 2. BDA 3. BAD 4. CBA (............)

23) **“அ”** **நதிகள்**

1. ஆமூர்நதி
2. வொல்காநதி
3. நைல்நதி

**“ஆ”** **நதி சங்கமிக்கும் கடல்கள்**

A. செங்கடல்
B. ஒக்கொட்ஸ்கடல்
C. கஸ்பியன்கடல்
D. மத்தியதரைக்கடல்

1. BCD　2. ADC　3. ACD　4. BDC　(............)

24) **“அ”** **பயிர் ஆராய்ச்சிநிலையம்**

1. அகலவத்தை
2. பத்லேகொட
3. எம்பிலிப்பிட்டிய

**“ஆ”** **அமைந்துள்ள மாவட்டம்**

A. களுத்துறை
B. இரத்தினபுரி
C. குருநாகல்
D. நுவரெலியா

1. ACD　2. BDC　3. ACB　4. BCD　(.............)

25) **“அ”** **கனிப்பொருட்கள்**

1. காரீயம்
2. வெண்களி
3. பந்துக்களி

**“ஆ”** **அதன் பரம்பல்**

A. ஒட்டிசுட்டான்
B. போகல
C. பொரலஸ்கமுவ
D. துட்டுவெவ

1. BCA　2. BCD　3. DCA　4. BAC　(............)

❖ **26 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தினை எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

26) கீழே A தொடக்கம் B வரை தரப்பட்டுள்ள தகவல்களில் இருந்து உலகின் கோதுமைப் பயிர்ச் செய்கைக்கு பொருத்தமான மூன்று தகவல்களை மாத்திரம் கொண்டிருக்கும் விடையைத் தெரிவு செய்க.

A. உலகிலே அதிகளவு உற்பத்தி செய்யப்படும் தானியமாகும்.
B. ஊழியச் செறிவுகொண்ட பயிர்ச்செய்கையாகும்.
C. உலகம் முழுவதும் பரந்தளவிலான சந்தை காணப்படுகின்றது.
D. வெப்பநிலை $27^0C$ மேல் தேவைப்படுகின்றது.
E. மழைவீழ்ச்சி 300 - 500mm போதுமானதாகும்.

1. A,C,E　2. A,B,E　3. A,C,D　4.,C,E　(.............)

27) புவியின் அமைப்பின் பிரதான மூன்று படைகளும் எல்லைகளால் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் கூற்றன்பேர்க் தொடர்ச்சியின்மை வேறுபடுத்தும் படைகளாவன.
1. கண்டஓடு மற்றும் சமுத்திரஓட்டை வேறுபடுத்துகின்றது.
2. மூடிப்பகுதி மற்றும் கோளவகப்பகுதியை வேறுபடுத்துகின்றது.
3. ஓடு மற்றும் மேல் மூடிப்பகுதியை வேறுபடுத்துகின்றது.
4. உட்கோளவகம் மற்றும் வெளிக்கோளவகத்தை வேறுபடுத்துகின்றது.　(.............)

28) கடகக் கோட்டிற்கும் ஆட்டிக் வட்டத்திற்கும் இடையே அமைந்துள்ள காலநிலை வலயம் எது?
1. அயனக்காலநிலை வலயம் அமைந்துள்ளது
2. மொன்சூன் காலநிலை வலயம் அமைந்துள்ளது
3. இடைவெப்பக்காலநிலை வலயம் அமைந்துள்ளது
4. குளிர் காலநிலை வலயம் அமைந்துள்ளது.　(.............)

29) பாற்பண்ணை உற்பத்தியாளருக்கு புதிய பசு இனங்கள், புல் இனங்களை அறிமுகப்படுத்தியதுடன் தேவையான அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கும் இடங்கள்.
1. அம்பேவல, மாத்தளை, வல்பிட்ட ஆராய்ச்சி நிலையங்கள்
2. அகலவத்தை, அம்பேவல, மாத்தளை ஆராய்ச்சி நிலையங்கள்
3. போம்புவல, கனன்வில, வல்பிட்ட ஆராய்ச்சி நிலையங்கள்
4. கனன்வில, அம்பேவல, வல்பிட்ட ஆராய்ச்சி நிலையங்கள்　(.............)

30) நெற் செய்கைக்கான ஏற்றுமதிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ள இடங்கள் முறையே அமைந்திருப்பது.
1. பொலன்நறுவை மற்றும் குருநாகல்
2. தம்பதெனியா, குருநாகல்
3. ராஜாங்கன, மகாஇலுப்பள்ளம்
4. பொலன்நறுவை, ராஜாங்கன (.............)

31) இலங்கையில் ஈரவலயப்பகுதியில் காணப்படுகின்ற நீர்த்தேக்கங்களை மட்டும் முறையே கொண்டிருப்பது.
1. ரன்தெம்பை, சேனநாயக்காசமுத்திரம்
2. ரன்தெனிகல, கலாவாவி
3. பராக்கிரமசமுத்திரம், இரணைமடுக்குளம்
4. கொத்மலை, விக்டோரியா (.............)

32) இலங்கையில் கடும் பாதுகாப்பிற்கு உட்பட்ட இயற்கை ஒதுக்குப்பிரதேசங்களை மட்டும் கொண்ட விடை
1. ஹக்கல, வில்பத்து, ரிட்டிகல
2. கவுடுல்ல, மின்னேரியா, யால
3. ஹக்கல, யால, ரிட்டிகல
4. சிங்கராஜவனம், கன்னெலிய, தெதியகல
(.............)

33) அபிவிருத்தியை அளவிடும் நவீன குறிகாட்டிகளுள் ஒன்றான மனித அபிவிருத்திச் சுட்டெண்ணில் உள்ளடங்குவன.
1. சிசுமரணவீதம், ஆயுட்காலம், எழுத்தறிவு வீதம்.
2. எழுத்தறிவு, ஆயுள் எதிர்பார்ப்பு, கொள்வனவு சக்தி.
3. பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு, எழுத்தறிவு, சிசுமரணவீதம்
4. ஆயுள் எதிர்பார்ப்பு, கொள்வனவு சக்தி. சிசுமரணவீதம், (.............)

34) இலங்கையில் நுரைச்சோலை, கெரவலப்பிட்டிய பிரதேசங்களில் எவ்வகையான வலுசக்தி மூலங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
1. வெப்ப மின்சக்தி நிலையம்
2. நீர் மின்சக்தி நிலையம்
3. சூரிய மின்சக்தி நிலையம்
4. காற்று மின்சக்தி நிலையம் (.............)

35) இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பில் அவதானிக்கக்கூடிய விசேட பண்பாக **அமையாதது.**
1. முதியோர் சனத்தொகை அதிகரித்தல்
2. சிறுவர் சனத்தொகை குறைவடைதல்
3. பிறப்பு வீதம் படிப்படியாகக் குறைவடைதல்
4. பெண்களின் ஆயுட்காலம் குறைவடைதல் (.............)

36) புவிக்கோளம் வெப்பமடைவதில் செல்வாக்குச் செலுத்தும் மானிடக்காரணிகளுள் ஒன்று.
1.எரிமலை வெடிப்பு
2. சூரியப்புள்ளிகள்
3.காட்டுத்தீ
4. அணுப்பரிசோதனை (.............)

❖ **A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து 37 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

A - 1. சிறுவர் குடித்தொகை
2. பெண்களின் கருவளவீதம் குறைதல்

B - 1. வாகனப் புகைப்பரிசோதனை
2. பூகோளம் வெப்பமடைதல்

C - 1. அனர்த்த முன்னாயத்தச் செயற்பாடு
2. மானிடப் பாதிப்புக்கள்

D - 1. சேதன விவசாயம்
2. மண் வளம் (.............)

37) முதலாவதில் ஏற்படும் குறைவுக்கு இரண்டாவது காரணமாவதைக் குறித்துக்காட்டும் சோடிகளின் இணைப்பு எது?
1. A 2. B 3. C 4. D (.............)

38) முதலாவதின் அதிகரிப்பானது இரண்டாவதில் ஏற்படும் வீழ்ச்சிக்குக் காரணமாவதுடன் சூழல்சமநிலையை ஏற்படுத்தும் என்பதை எடுத்துக்காட்டும் சோடிகளின் இணைப்பு எது?
1. A 2. B 3. C 4. D (.............)

39) முதலாவதில் ஏற்படும் அதிகரிப்புக்கு இரண்டாவதில் ஏற்படும் அதிகரிப்பே காரணமாகும் என்பதை எடுத்துக்காட்டும் சோடிகளின் இணைப்பு எது?
1. A 2. B 3. C 4. D (.............)

40) முதலாவதில் ஏற்படும் அதிகரிப்பால் இரண்டாவதில் அதிகரிப்பு ஏற்படும் என்பதை எடுத்துக்காட்டும் சோடிகளின் இணைப்பு எது?
1. A 2. B 3. C 4. D (.............)

(40X1=40 புள்ளிகள்)

## பகுதி- I

- இவ்வினாத்தாள் **I,II** என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது
- பகுதி **I** இல் உள்ள வினா கட்டாயமானது. அதில் **(அ), (ஆ),( இ)** ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- பகுதி **II** இல் இருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.
- எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு **விடை எழுத வேண்டும்.**

01) **(அ) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கையின் 1:50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் பகுதியை நன்கு அவதானித்து , அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் (பக்கம் 8) பயன்படுத்துக.**

❖ **(i)** தொடக்கம் **(v)** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையை அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) A எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் அம்சம் எது? (1 புள்ளி)
(பற்றைக்காடு, சேனை, புல்வெளி)

(ii) C எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் விவசாய நிலப்பயன்பாட்டு அம்சம் எது? (1 புள்ளி)
(தேயிலை, வீட்டுத்தோட்டம், நெல்)

(iii) D-E கோட்டினால் காட்டப்படும் பௌதிக அம்சம் யாது? (1 புள்ளி)
(பள்ளத்தாக்கு, சுவடு, மென்சாய்வு)

(iv) F என்ற நாற்பக்கலில் அமைந்துள்ள நிர்வாக எல்லை எது? (1 புள்ளி)
(மாகாணம், மாவட்டம், மாநகரசபை)

(v) H என்ற நாற்பக்கலில் அமைந்துள்ள பண்பாட்டு அம்சம் எது? (1 புள்ளி)
(குளம், பாழடைந்தகுளம், அணைக்கட்டு)

❖ **(vi)** தொடக்கம் **(vii)** வரையுள்ள வினாக்களுக்குரிய விடையை சரியாக எழுதுக.

(vi) B எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் நிலப்பயன்பாடு எது? (1 புள்ளி)
(vii) நாற்பக்கல் G இல் உள்ள சமய வழிபாட்டுத் தலம் எது? (1 புள்ளி)

❖ படப்பகுதி பற்றிய மூன்று கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு கூற்றினையும் வாசித்து அவை சரியாயின் "ச" எனவும் பிழையாயின் "பி" எனவும் விடைத்தாளில் தரப்பட்டுள்ள வினா இலக்கத்துக்கு எதிரே எழுதுக.

(viii) இப் படப்பிரதேசத்தில் இரண்டு மாகாணப் பகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. (1 புள்ளி)
(ix) நாற்பக்கல் G இல் பிரதான வீதி காணப்படுகின்றது. (1 புள்ளி)
(x) இப் படப்பிரதேசத்தின் வடபகுதியின் பெரும்பகுதி காட்டுப்பிரதேசமாகும். (1 புள்ளி)

**(ஆ) உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்கு உலகப் படத்தின் அருகே அமைந்துள்ள நிரலைப் (பக்கம் 9) பயன்படுத்துக.**

❖ (i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. உலகப் படத்திலிருந்து ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவு செய்து அதனை உலகப்படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே உள்ள கூட்டினுள் எழுதுக.

| | | |
|---|---|---|
| (i) | பிறனிஸ் மலை | W,X,Y |
| (ii) | தங்கணிக்காஏரி | N,O,P |
| (iii) | தாய்வான் தீவு | R,S,T |

(iv) கரீபியன் கடல் K,L,M

(v) றியோடிஜெனிரோ நகரம் B,C,D

(5X1=5 புள்ளிகள்)

**(இ) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் படத்துக்கு அருகிலுள்ள (பக்கம் 9) நிரலைப் பயன்படுத்துக.**

❖ (i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. இலங்கைப் படத்திலிருந்து ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவு செய்து அதனை இலங்கைப்படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே உள்ள கூட்டினுள் எழுதுக.

(i) காங்கேசன்துறை G, H, J

(ii) நிலச்சரிவு ஏற்படும் மாவட்டம் A, B, C

(iii) இறால் வளர்க்கப்படுகின்ற சிலாபம் D, E, F

(iv) பித்தளை உற்பத்தி நடைபெறும் பிலிமத்தலாவை O, P, R

(v) ஹிங்குறாங்கொட நெல் ஆராய்ச்சி நிலையம். K, L, M

(5X1=5 புள்ளிகள்)


## பகுதி- II

**02)** (i) நீரியல் வட்ட வரைபடத்தில் A,B எழுத்துக்களினால் குறித்துக்காட்டப்படும் செயன்முறையை முறையே தருக. (2 புள்ளிகள்)

(ii) நீரியல் வட்டத்தின் A செயன்முறையினால் மனிதனுக்குக் கிடைக்கப்பெறும் பயன்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(iii) (a) இலங்கையில் மிகப்பரந்தளவு தரைக்கீழ்நீரின் இருப்பு காணப்படும் **இரண்டு** இடங்களைத் தருக. (2 புள்ளிகள்)

(b) நீர் மூலங்களைப் பாதுகாக்கும் **இரண்டு** வழி முறைகளைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (3 புள்ளிகள்)




**03)** (i) உலகிலே தேயிலையை பிரதானமாகப் பயிரிடும் நாடுகளுள் ஓர் கிழக்காசியநாடு மற்றும் ஓர் தென்னாசியநாடு என்பனவற்றை முறையே தருக. (2 புள்ளிகள்)

(ii) உலகின் தேயிலைப் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(iii) (a) மத்தியநிலத் தேயிலை பயிரிடும் மாவட்டங்கள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)


(b) இலங்கையின் தேயிலைப் பயிர்ச்செய்கை தொடர்பில் எதிர்நோக்கும் **இரண்டு** பிரச்சினை களைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றிற்கான தீர்வினை விளக்குக. (3 புள்ளிகள்)

**04)** (i) உலகில் கப்பல் கட்டும் தொழிலில் பிரசித்திபெற்ற A,B என்ற எழுத்துக்களால் குறித்துக்காட்டப்பட்ட நாடுகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ii) கப்பல் கட்டும் தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(iii) (a) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் படகுகளின் வகைகள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

(b) இலங்கையில் படகுகட்டும் தொழிலில் ஏற்படும் **இரண்டு** பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குக. (3 புள்ளிகள்)



**05)** (i) உலகின் **இரண்டு** சனத்தொகை வளர்ச்சிக் காலகட்டங்களையும் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ii) உலக சனத்தொகை ஐதாக வாழும் பிரதேசங்கள் **மூன்றினைப்** பெயரிடுக. (3 புள்ளிகள்)

(iii) (a) இலங்கையின் சனத்தொகை மிக அதிகமாக உள்ள **இரண்டு** மாவட்டங்களைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(b) இலங்கையின் ஈரவலயத்தில் மக்கள் செறிவாக வாழ்வதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** விளக்குக. (3 புள்ளிகள்)

**06)** (i) உலகில் வட அத்திலாந்திக் சமுத்திரம், வங்களாவிரிகுடாவை அண்டிய இந்து சமுத்திரப்பகுதியில் தோற்றம் பெறும் சூறாவளிக்கு வழங்கப்பட்ட பெயர்களை முறையே தருக. (2 புள்ளிகள்)

(ii) சூறாவளியினால் ஏற்படும் விளைவுகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(iii) (a) இலங்கையில் சூறாவளியின் தாக்கம் ஏற்படும் மாதங்கள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

(b) இலங்கையில் சூறாவளியின் அனர்த்தத்தைக் குறைத்துக் கொள்வதற்கு மேற்கொள்ளக்கூடிய இரண்டு நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** விளக்குக. (3 புள்ளிகள்)

**07)** (i) இலங்கையில் X,Y என்பது பால் உற்பத்தி ஆராய்ச்சி நிலையங்களாகும். அவற்றின் பெயரை முறையே தருக. (2 புள்ளிகள்)




(ii) (a) இலங்கையில் உள்ள பால்சார் உற்பத்தி **ஒன்று** தருக (1 புள்ளி)

(b) இலங்கையில் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதற்கான காரணங்கள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

(iii) (a) இலங்கையில் பெருமளவான எருமை மாடுகள் வளர்க்கப்படும் வலயம் எது? (1 புள்ளி)

(b) இலங்கையில் பாற்பண்ணை உற்பத்தி தொடர்பில் எதிர்நோக்கும் **இரண்டு** பிரச்சினைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

**08)** (i) அபிவிருத்தியை அளவிடப் பயன்படுத்தப்பட்ட ஆரம்பகாலக் குறிகாட்டிகள் **இரண்டு** தருக (2புள்ளிகள்)

(ii) இலங்கையில் உள்ள சர்வதேச விமான நிலையங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(iii) (a) கல்வித்துறையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

(b) தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் பற்றிய அறிவைப் பெறுவதற்கான மூலங்கள் **இரண்டைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** விளக்குக. (3 புள்ளிகள்)

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)
General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)

| | புவியியல் - II<br>Geography II | 61 T II |
|---|---|---|

சுட்டெண்/பெயர்:-……………………….

1.(அ)

பரீட்சகரின் உபயோகத்திற்கு

i. ……………………………………………………………………………

ii. ……………………………………………………………………………

iii. ……………………………………………………………………………

iv. ……………………………………………………………………………

v. ……………………………………………………………………………

vi. ……………………………………………………………………………

vii. ……………………………………………………………………………

viii. ……………………………………………………………………………

ix. ……………………………………………………………………………

x. ……………………………………………………………………………

10

LMDMUni


வினா – 1.(ஆ)




i. ☐
ii. ☐
iii. ☐
iv. ☐
v. ☐

5

வினா – 1.(இ)




i. ☐
ii. ☐
iii. ☐
iv. ☐
v. ☐


5

மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

**Provincial Department of Education Northern Province**

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022 (2023)

| | | |
|---|---|---|
| தரம் :- 11<br>**Grade :- 11** | புவியியல் - II<br>**Geography - II** | 61 T II |




1:50,000